தமிழ்நாடு அரசு

சுருக்கம்

பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் வீடுகளுக்கு குடிநீர் குழாய்கள் இணைப்பு கொடுக்க புதிய முறைகள் குறித்து ஆணைகள் வெளியிடப்படுகின்றன

---

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை

அரசாணை (நிலை) எண் 287 நாள் 5.11.96

பார்வை

1. நகராட்சி நிர்வாக இயக்குநரின் நேர்முக கடித எண் 62404/96 டபிள்யு எஸ் 1/

நாள் 30.9.96

2 பேரூராட்சி நிாவாக இயக்குநரின் நேர்முக கடித எண் 22031/96/சி3

நாள் 7.10.96

ஆணை

1. தற்போதுள்ள நகராட்சி மற்றும் மாநகராட்சி சட்டங்களின்படி வீடுகளுக்கு குழாய்கள் மூலம் குடிதண்ணீர் வழங்க புதிய இணைப்புகள் கொடுப்பது, அக்குழாய்களை பழுது பார்த்து பராமரிப்பது போன்ற பணிகள் அந்தந்த உள்ளாட்சி மன்றங்களின் பொறுப்பாகும். இதற்கான துணை விதிகள் உள்ளாட்சி மன்றங்களினால் தயாரிக்கப்பட்டு அவைகள் மீது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய கண்காணிப்பு பொறியாளர் மற்றும் அந்தந்த நிர்வாக இயக்குநரின் ஒப்புதலும் பெற வேண்டும்.

2. தமிழ்நாட்டிலுள்ள அநேக உள்ளாட்சி நிறுவனங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. குடிநீர் வழங்குவது குறித்த துணை விதிகளில் கண்டுள்ளவாறு வீடுகளுக்கு புதிய குடிநீர் குழாய் இணைப்புகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு குடிநீர் குழாய் இணைப்புகள் கொடுக்க அந்த உள்ளாட்சி

பகுதியிலுள்ள பிளம்பர்களுக்கு உரிமம் வழங்க உள்ளாட்சி நிறுவனங்கள் இதற்கான துணை விதிகளில் வகை செய்ய வேண்டும். மேலும் இவ்வாறு பிளம்பர்களுக்கு உரிமம் வழங்கப்படாத இடங்களில் உள்ளாட்சி நிறுவன பணியாளர்கள் மூலமாகவே இப்பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. எனவே, உள்ளாடசி நிறுவனங்களில் வீடுகளுக்கு புதிய குடிநீர் குழாய் இணைப்புகள் கொடுக்க இந்த உரிமம் பெற்ற பிளம்பர்கள் மூலமாகத் தான் வீட்டுச் சொந்தக்காரர்கள் விண்ணப்பம் செய்து பணிகளை நிறைவேற்றிட வேண்டும். உள்ளாட்சி நிறுவன பொறியியல் துறைப் பணியாளர்கள் போதுமான அளவில் இல்லாததால் இந்தப் பணிகளை அவர்கள் மூலம் திருப்திகரமாகவும், உடனடியாகவும் நிறைவேற்ற முடிவதில்லை.

3. மேலும் புதிதாக குடிநீர் திட்டங்கள் தொடங்கப்படும் சமயங்களையும், குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள் தொடங்கப்படும் சமயங்களையும் தவிர மற்ற நேரங்களில் ஒன்று அல்லது இரண்டு பிளம்பர்கள் தான் உரிமம் பெற்றவர்களாக இருக்கிறார்கள். வீட்டு குழாய் இணைப்புகள் அதிகமாக உள்ள உள்ளாட்சி நிறுவனங்களில் குறைந்த எண்ணிகையில் உள்ள உரிமம் பெற்ற பிளம்பர்களால் பொது மக்களுக்கு உடனடியாக சேவைகளை செய்து கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது.. மேலும் பொது மக்கள் தாங்கள் விரும்பும் நபர்கள் மூலம் இச்சேவையினை நிறைவேற்றுவதற்கு வசதியாக கீழ்க்கண்ட புதிய முறையை அனைத்து பேரூராட்சிகளிலும், நகராட்சிகளிலும் சென்னை மாநகராட்சி நீங்கலாக மற்ற மாநகராட்சிகளிலும் ஓர் ஆண்டுகால அளவிற்கு நடைமுறைப்படுத்தி அதன் அடிப்படையில் இம்முறையைத் தொடர செய்யலாம் என அரசு முடிவு செய்துள்ளது

1) ஒரு வீட்டிற்கு தண்ணீர் குழாய் இணைப்பு புதிதாகக் கொடுக்க வேண்டுமென்றால், அந்த வீடுச் சொந்தக்காரர் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனத்திற்கு மனு செய்ய வேண்டும்.

2) அந்த மனுக்கள் அந்த உள்ளாட்சியில் பெறப்படும் நாளிலிருந்து முறைப்படி அதற்கான பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்.

3) உள்ளாட்சி நிறுவனப் பணியாளர்கள் பதிவேட்டில் பதிவு செய்த வீடுகளுக்கு நேரில் சென்று ஆய்வு செய்து ஆய்வின் அ டிப்படையில், இதற்கான ஆணை உள்ளாட்சி நிறுவனம் வழங்க வேண்டும். புதிய இணைப்புகள் கொடுக்க எந்தெந்த தளவாடச் சாமான்கள் தேவை என்பது குறித்தும் இணைப்பு முறை குறித்தும் வரைபடம் உட்பட அந்த ஆணையில் தெரிவிக்க வேண்டும்.

4) உள்ளாட்சி நிறுவனத்தில் பகிர்மானத் தண்ணீர்க் குழாயில் இணைப்பு கொடுக்கும் வேலையைத் தவிர மற்ற வேலைகளை எல்லாம் இணைப்புக் கேட்டவரே அந்த ஆணையில் தெரிவித்துள்ளவாறு செய்து முடிக்க உள்ளாட்சி அலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும்.

5) சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவன அலுவலர் மீண்டும் சென்று பார்வையிட்டு இணைப்புக் கொடுப்பதற்கான பணிகள் உள்ளாட்சி நிறுவன ஆணையில் தெரிவித்துள்ளவாறு நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்று சரிபார்த்து இணைப்பு

கேட்டவர் முன்னிலையிலேயே பகிர்மானக் குழாய்க்கு இணைப்பைக் கொடுத்து தனது அலுவலகத்திற்கு இப்பணி நிறைவேற்றிக் கொடுத்த அறிக்கை அளிக்க வேண்டும்.

6) உள்ளாட்சி நிறுவனப் பணியாளர்கள் நேரில் சென்று ஆய்வு செய்து சரிபார்த்து. இணைப்பைக் கொடுப்பதற்கு கட்டணமாக ரூ.100/ - க்கு குறையாமலும், ரூ 200/ - க்கு மிகாமலும் அந்தந்த உள்ளாட்சி நிறுவனங்களே மன்றத்தின் மூலம் நிர்ணயம் செய்து கொள்ளலாம்

இந்த புதிய முறையை அமுல்படுத்துவதற்கு முன் தேவையிருப்பின் துணை விதிகளுக்கு திருத்தங்கள் அனைத்து பேரூராட்சிகள். நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் (சென்னை மாநகராட்சி நீங்கலாக) தயாரித்து மன்றங்களின் ஒப்புதல் உடனடியாக பெற்று அதன் பிறகு இந்தப் புதிய முறையை நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும். பேரூராட்சிகளின் இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், இதற்கான மாதிரி திருத்த துணை விதிகள் மற்றும் தேவையான அறிவுரைகளும் அனைத்து பேரூராட்சிகளுக்கும் நகராட்சிகளுக்கும் வழங்குமாறும் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ். மாலதி.

அரசு செயலாளர்

பெறுநர்

மாநகராட்சிகளின் தலைமை இயக்குநர், சென்னை 34
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை 5
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை 108
மாநகராட்சி ஆணையாளர்கள், மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராபள்ளி, திருநெல்வேலி மற்றும் சேலம்
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை5
இயக்குநர். உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறை சென்னை 108

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்